**கொடக்கவெல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொடக்கவெல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும்எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் கொடக்கவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 4,431,778 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டுள்ள காரணத்தால் ஆண்டிற்கான செயற்பாட்டு வருமானம் மற்றும் நடைமுறை சொத்துக்கள் அதற்கு சமனான பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | 2020 ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பணம் பெல்மடுள்ள மற்றும் எம்பிலிபிட்டிய நீதிமன்றத்தால் அட்டவணை தயாரித்து தேவையான அங்கீகாரம் பெற தாமதித்ததால் இறுதி கணக்கு தயாரிக்க முன்னர் அத் தண்டப்பணம் தொடர்பான தகவல்களை வழங்க முடியாது போனதாக. | மீளாய்வாண்டிற்கு உரிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கொடக்கவெல பொது வியாபார கட்டிடத் தொகுதியில் தளப்பரப்பு கற்களை பரப்பும் கருத்திட்டத்திற்காக சபரகமுவ மாகாண சபையின் மூலம் கிடைத்த ஒதுக்கீடு உள்ளடங்களாக கூட்டுத் தொகை ரூபா 1,731,102 செலவிடப்பட்ட போதும், ரூபா 2,731,102 ஆக மூலதனமாக்கியதன் | எதிர்வரும் கணக்காண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய வருமான செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக காணி மற்றும் கட்டிடங்களின் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானத்தால் பங்களிக்கும் கணக்கு மீதி ரூபா 1,000,000 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்குரிய மொத்த செலவையும் மூலதன வருமானமாக பில்லிட்டதால் ஆண்டிறுதியில் நிலுவை மூலதன உதவிகளின் பெறுமதி ரூபா 731,102 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | மாதம்பே மீன் சந்தைக்குரிய கிரயம் ரூபா 5,654,649 ஆன கட்டிடங்கள் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | உரிய சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து அரம்பித்து நடாத்திச் செல்லும் கணக்கின் மீதியை நிதிக்கூற்றின் மூலம் சமர்பிக்காததால் ஆண்டிறுதி திகதியில் பணம் மற்றும் பணத்திற்கு சமமான வற்றின் பெறுமதி ரூபா 1,693,333 குறைத்து காட்டப்பட்டிருந்தது. மேலும், இக் கணக்கிற்கு சேறும் பணத்தை வருமானமாக இனங்காணாததால் ஆண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா 228,234 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு கிடைக்கும் அனைத்து பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் சபையின் நிதிக்கூற்று மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9,004,505 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 7,637,639 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 3,327,855 ஆன நிலுவை வீதிவரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையாகவுள்ள வீதவரி உரித்தான நபர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்தல், 02 காலாண்டுகளிற்கு மேலான நிலுவை | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வீதவரிக்காக நடமாடும் சேவையை நடாத்துதல், சிவப்பு அறிவத்தல் அனுப்புதலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | |
| (ii) | மீளாய்வாண்டு இறுதி திகதியில் ரூபா 138,738 ஆன நிலுவை ஏக்கர் வரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏக்கர் வரி ஒப்பாய்வு குழு ஒன்றை நியமித்து அதனூடாக காணிகளின் உரிமையை உறுதி செய்வதனூடாக நிலுவை ஏக்கர் வரி மீதியை தீர்த்துக் கொள்ள நடவடிகைகை எடுக்கப்படுவதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

(ஆ) ஏனைய வருமானம்

| | | |
|---|---|---|
| 2020 ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட அறிவித்தல் பலகை கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ரூபா 444,726 ஆன நிலுவை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது அனுமதியற்ற அறிவித்தல் பலகைகள் அகற்றப்பட்டுள்ளதாக. | நிலுவை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள 38 தொலை தொடர்பு கோபுரங்களிற்காக அனுமதிப்பத்திர கட்டணமாக ரூபா 102,000 அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 ஆண்டு திசெம்பர் மாதம் மேற்கொண்ட கணிப்பீட்டின் பிரகாரம் இனங்காணப்பட்ட 34 தொலை தொடர்பு கோபுரங்களிற்காக வாடகைப் பணம் செலுத்துவதற்குரிய முதலாம் கடிதம் தற்போது அனுப்பியுள்ளதாக. | சபைக்கு அறிவிட வேண்டிய வருமானத்தை உரிய முறையில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாக முறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 3,615,000 ஆன கழிவுப் பொருட்கள் களஞ்சிய மத்திய நிலையத்தை நிர்மாணிக்க 2019 ஜுன் 03 திகதி ஒப்பந்தக்தாரருடன் ரூபா 2,753,315 இற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் 2019 செப்டம்பர் 03 திகதியன்று வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும், ஒப்பந்ததாரரின் கோரிக்கை பிரகாரம் 2019 நவம்பர் 18 வரை உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அக்கால எல்லையினுள்ளும் வேலைகளை பூர்த்தி செய்யாததால் 2020 திசெம்பர் 04 திகதிய கடிதம் மூலம் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு இயலாதவர் பதிவேட்டிற்கு உட்படுத்தியிருந்தது. மேலும், பௌதீக முன்னேற்றம் 70 சதவீதமான குறித்த வேலைக்காக ரூபா 1,900,000 ஓபந்ததாரரிற்கு செலுத்தியிருந்துடன், கணக்காய்வு திகதிய 2021 மார்ச் 31 திகதியளவிலும் அவ்வேலையை பூர்த்தி செய்ய சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒப்பந்ததாரர் உடன்பட்ட கால எல்லையில் மற்றும் மேலதிக காலத்தில் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய இயலாததன் காரணமாக உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு இயலாதவர் பதிவேட்டிற்கு உட்படுத்தியுள்ளதாகவும், எஞ்சியுள்ள வேலைப் பகுதிக்காக மதிப்பீடொன்று தயாரித்துக்கொண்டு இருப்பதாக. | திட்டமிட்ட பிரகாரம் அபிவிருத்தி வேலைகளை பூர்த்தி செய்ய ஒப்பந்ததாரரை ஊக்கப்படுத்த வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் மீளாய்வாண்டில் 1800 மெட்ரிக் டொன் அளவான திண்மக் கழிவுகளை வெளியிட ரூபா 11,156,011 செலவு மற்றும் 24 ஊழியர்களும் 05 வாகன மற்றும் இயந்திர உபகரணங்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும் சுற்றாடல் நேய அடிப்படையில் திண்மக் கழிவு முகாமை கருத்திட்டத்தை செயற்படுத்தியிருக்கவில்லை. | பலவின்ன பண்டாரஹேன்யாய எனும் காணி, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் முழு உரிமையையும் கொடக்கவெல பிரதேச சபைக்கு ஒப்படைக்காமை மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ கருத்திட்டத்திற்கு பணம் ஈடுபடுத்த இல்லாததன் காரணமாக இன்னும் அதனை ஆரம்பிக்க முடியாதுள்ளதாக. | காணியின் முழு உரிமையையும் சபைக்கு சுவீகரித்து திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |